பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 31 திங்கட்கிழமை 16.09.2024 கதிர் 313

# மாகாண அதிகாரங்களை மத்தி மீளப் பெறக்கூடாது

## அதை உறுதிப்படுத்துவோம் என்று சஜித் நேற்று வாக்குறுதி





ஒன்றிணைந்த நாட்டிற்குள் அதிகார பகிர்வுக்காக குறுகிய காலத்திற்குள் மாகாண சபை தேர்தலை நடத்துவோம். மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை ☞ 2

### இது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்அக்கப்போர் இன்னும்ஓய்ந்தபாடாயில்லை. சஜித் பிரேமதாசநேற்றுயாழ்ப்பாணத்தில் கூட்டம் நடத்தியபோது அவருக்கு ஆதரவு தெரிவித்து கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன், அவைத் தலைவர் சிவஞானம் ஆகியோர் மேடை ஏறியிருந்தனர்.

அதேநேரத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனா திராசா ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனை அவரது யாழ்ப்பாண தேர்தல் அலுவலகத் திற்குச் சென்று நேரில் சந்தித்துப் பேசினார். அவருடன் அவரது மகன் கலையமுதனும் (மதியுரைஞர்) இருந்தார். மற்றொருபுறத்தில் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் ☞ 2

## தெரிவாகும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவோம்

### அமெரிக்கா அறிவிப்பு

இலங்கை மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதி எவராக இருந்தாலும் அவருடன் இணைந்து செயற்பட அமெரிக்கா தயாராக இருக்கின்றது என்று ☞ 8

## "இலங்கையில் கவனம்" அமெ. பயண ஆலோசனை

இலங்கையில் செப்டெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கு பயணம் மேற்கொள்ளும்போது அவதானத்துடன் செயற்படுமாறு தனது நாட்டு மக்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. ☞ 8

### தேர்தல் தினத்தன்றும் மறுநாளும்

## அவசர நிலையை எதிர்கொள்ள படையினரைத் தயார்ப்படுத்துக

### ஜனாதிபதி ரணில் அறிவுறுத்தல்





ஜனாதிபதித்தேர்தல் தினத்தன்றும் மற்றும் முடிவுகள் அறிவிக்கப் படும்போதும் நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு அவசர நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் பொலிஸாரையும் ஆயுதப் படைகளையும் இணைத்து 'அவசர திட்டத்தை' தயாரிப்பதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அனுமதி யளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. .

அவசர நிலை ஏற்படக்கூடும் என பாதுகாப்பு சபை ☞ 8



### உணர்வெழுச்சியுடன்

## தியாகி திலீபனின் நினைவேந்தல் தாயகத்தில் நேற்று தொடங்கியது

இந்திய அரசிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துப் பட்டினிப் போராட்டம் நடத்தி வீரச்சாவடைந்த தியாக தீபம் திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுத் தமிழர் தாயகத்திலும், தமிழர்கள் புலம்பெயர் வாழும் தேசம் எங்கும் உணர்வெழுச்சியுடன் தொடங்கியது.

நல்லூர் கந்தசு ☞ 8

## கொடையாளர் மாநாட்டினைக் கூட்டி வடக்கு கிழக்கில் பெரும் அபிவிருத்தி

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் உறுதியளிப்பு

வடக்கு - கிழக்கு மக்களை மையப்படுத்தியதாக சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டைக் கூட்டுவோம். போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு பிரதேசத்தை பெரும் அபிவிருத்தியின பால் இட்டுச் செல்வோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணியின் ☞ 8

## வாக்கு மோசடிக்கான அபராதம் அதிகரிப்பு

### ரூ. 2 லட்சமாக உயர்த்தப்பட்டது

வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு விதிக்கப்படும் அபராதத்தொகை 2 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டின் 23ஆம் ☞ 8

## புலமைப் பரிசில் பெறுபேறுகள் 40 நாட்களுக்குள்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளை 40 நாட்களுக்குள் வெளியிட எதிர்பார்ப்பதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் இன்று ஆரம்பிக் கப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை நேற்று இடம்பெற்றது. நாடளாவியரீதியில் 2 ஆயிரத்து 849 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெற்றதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. ☞ 8

## ரணிலுக்குப் போடும் வாக்குகள் அனுரவுக்குச் சார்பானவையே

### ரிஷாத் பதியுதீன் காட்டம்

மூன்றாவதுஇடத்திலுள்ளரணில் விக்ரமசிங்கவுக்கு அளிக்கப்படும் வாக்குகள் அனுரகுமார திஸாநாயக்கவுக்கு சார்பானதாகவே அமையும் என்றும் அனுர ஆட்சிக்கு வந்தால், ஆறு மாதங்களில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படும் எனவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, ☞ 8

## நாட்டைப் பிளவுபடுத்தவே புதிய அரசமைப்பு முயற்சி

### இடமளிக்கமாட்டோம் என சீறுகிறார் மகிந்த

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரை மேடைகளில் நாமல் ராஜபக்சவைத் தவிர்த்து எவரும் தேசியம் மற்றும் பௌத்தம் பற்றிப் பேசுவதில்லை. நாட்டை பிளவுப்படுத்தும் புதிய அரசமைப்பு பற்றிப் பேசுகிறார்கள். எக்காரணிகளுக்காகவும் நாட்டை பிளவுபடுத்த நாங்கள் இடமளிக்கமாட்டோம் என்று பொது ஜனபெரமுனவின் தலைவரும் ☞ 8

### ஐக்கிய மக்கள் சக்தி பொய் சொல்கிறது

## சஜித், அநுர போன்று நான் ஒழிப்போகிறவன் அல்லன்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவேசம்

ஜனாதிபதி போட்டியில் இருந்து நான் ஒதுங்கப் போவதாக ஐக்கிய மக்கள் சக்தி பொய்ப் பரப்புரை செய்து வருவதாகத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் சஜித் மற்றும் அநுரவைப் போன்று ராஜினாமா செய்யும் அல்லது ஒழிப்போகும் நபரல்லன் என்றும் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று நடைபெற்ற 'ரணிலால் இயலும்' கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சஜித்தும் அநுரவும் மாற்றம் பற்றிப் பேசினாலும், நாட்டிற்கு நடைமுறைச் சாத்தியமான வேலைத் திட்டமே தேவை எனவும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, எதிர்வரும் 5 வருடங்களில் இந்த நாட்டில் பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தி புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம். ☞ 2

## மலையகத்து மக்கள் இலங்கைத் தமிழரே

### இந்தியத் தமிழர்கள் அல்லர் என்கிறார் அநுர

மலையக மக்கள் இலங்கைத் தமிழர்களே. அவர்கள் இந்தியத்தமிழர்கள் அல்லர். அவர்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகளாகிவிட்ட பின்னர் எங்கிருந்து வந்தார்கள் என்று பேசுவதில் பயனில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க ☞ 9

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

பத்திரிகையின்முதலாளியுமானசரவணபவான் தலைமையிலானகட்சியின்வட்டுக்கோட்டைக் கிளையும் பொது வேட்பாளருக்குத் தமது ஆதரவுஎன்றுநேற்றுஅறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பு வெளியான கையோடு அவரை இராஜவீதியில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று சந்தித்தார் அரியநேத்திரன்.

மாவை சேனாதிராசா மற்றும் சரவணபவன் இவர்கள் இருவரையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தனித் தனியேஅவர்களின்இடங்களில்சென்றுசந்தித்துப்பேசியிருந்தார் என்பதையும் மறந்துவிடக் கூடாது. முதலில்யாழ்ப்பாணம்வந்திருந்தபோது உதயன் பத்திரிகைக்குச் சென்று சரவணபவனுடன் அளவளாவியிருந்தார் ரணில் விக்கிரமசிங்க. கடைசியாகஅவர்யாழ்ப்பாணம் வந்தபோது மாவை சேனாதிராசாவைச் சந்தித்துப் பேசியிருந்தார். அந்தச் சந்திப்பில் ரணில் வென்று ஜனாதிபதியாக வந்து சமஷ்டி இலங்கையின் முதல் தலைவராக வரவேண்டும் என்றெல்லாம் மாவை வாழ்த்தியுமிருந்தார்.

ஒருகட்சியின்தலைவராகஎதையெல்லாம் செய்யக்கூடாதோ அதையெல்லாம்செய்கிறார் மாவை சேனாதிராசா. சஜித் பிரேமதாசவை ஆதரித்து அவரது கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்திற்கான காரணத்தை விளக்கி, மக்களுக்குத் தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்றுத் திடீரெனப் பொது வேட்பாளரைச் சென்று அவர் சந்தித்திருக்கிறார். அரியநேத்திரனை ஆதரிப்பதாக அவர் எந்த அறிவிப்பும் விடுக்கவில்லை. அதற்குரிய துணிச்சலும் அவருக்குக் கிடையாது. அரியநேத்திரனின் அலுவலகத்திற்குச்சென்றுதேர்தல்களநிலவரம் குறித்துக்கலந்துரையாடினாராம். பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் உத்தி அது. சுத்தப் பச்சோந்தித்தனம்.

அவரால் தனது கட்சியையும் கட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியவில்லை. கட்சியின் முடிவுடன் மாறுபட்டு சொந்தமாக ஒரு தீர்மானத்தை எடுத்து ஜனாதிபதித் தேர்தலில் தனது நிலைப்பாடு என்று தீர்க்கமாக எதையும் அறிவிக்கமுடியவில்லை. அதற்குப் பதிலாக, முதலில் கட்சியின் மத்திய குழுத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவோம் என்றுஅறிவிக்கின்றார், பின்னர்ஜனாதிபதியை வீட்டுக்கு அழைத்துச் சந்திக்கின்றார். அந்தச் சந்திப்பில் வேறு இரு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இழுத்துவிடப் பார்க்கின்றார். அதன் பின்னர் பொது வேட்பாளரைச் சென்று சந்தித்துத் தான் ஏதோ பொதுவேட்பாளருக்கு ஆதரவானவர் போன்று காட்ட முற்படுகின்றார். இவை அனைத்தும் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்.

அவருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் அல்லது கட்சியின் மத்திய குழுவிற்கும்முரண்பாடுகள்இருக்கலாம். அதை அவர் கட்சிக்குள் பேசித் தீர்த்திருக்கவேண்டும். அதைவிடுத்துதமிழ்மக்களை, குறைந்தபட்சம் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர்களைக் குழப்பியடிக்கும் விதத்தில் இப்படி சஜித்துக்கும் நேசக்கரம், ரணிலோடும் கள்ள உறவு, பொது வேட்பாளருக்கும் ஆதரவு போன்ற நடிப்பு என்று கீழ்த்தரமாக நடந்துகொள்வது ஒரு தலைவருக்கு அழகல்ல. தன்னை ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகி என்கிற அளவிற்குத்தலையில்ஒருசிவப்புத்துணியுடன் படம்போட்டு மக்களிடம் வாக்குக் கேட்டு வந்த மாவையா இப்படிக் கீழ்த்தரமான (இதைவிடக்கேவலமானவார்தைகள்ஏதாவது உங்களுக்குத் தெரிந்திருந்தால் அவற்றையும் நீங்கள் பயன்படுத்திக்கொள்ளலாம்) அரசியல் செய்கிறார் என்று இருக்கின்றது.

சரியோ பிழையோ ஒரு முடிவு எடுக்கத் தெரியவில்லை என்றால் எதற்காக தலைமைப்பதவிக்கு ஆசைப்படவேண்டும்? இனத்தைக் குழப்பவேண்டும். இப்படிப்பட்ட ஒரு தலைவர் இனியும் தமது கட்சிக்கு வேண்டுமா என்பதைத் தமிழ் அரசுக் கட்சி தீர்மானிக்கவேண்டும். தமிழர்களின் மிக மோசமான, கேவலமான, கீழ்த்தரமான தலைவர் என்று மாவையை வரலாறு பதிவு செய்துகொண்டிருக்கின்றது. இந்த இழிநிலைக்குச்சென்று மாள்வதைவிட அவர் அரசியலை விட்டு ஒதுங்குவதே நல்லது.

மறுபுறத்தில், மானிப்பாயில் நடந்த சஜித் ஆதரவுக் கூட்ட மேடையில் 'மைக்' பிடித்த சுமந்திரன் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கு எதிராக ஒரு பிடிபிடித்தார். அரியநேத்திரன் என்கின்ற மாயமானுக்கு மயங்காமல் அதனைத் தூக்கி வீசி விட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கமையவேதான் சஜித்தை ஆதரிக்கும் கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக முதன்முதலாக மேடையேறியுள்ளார் என்றும் கூறினார். அவர் அப்படிச் சொல்கிறார், ஆனால் கட்சித் தலைவரோ அதற்கு எதிர்மாறாக அரியத்தாருடன் அவரது அலுவலகத்திற்குச் சென்று கொஞ்சிக் குலாவுகின்றார். அதைப் பற்றியும் சுமந்திரன் பேசியிருக்கின்றார். தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்த போதிலும்கூட எமது கட்சிக்குள்ளேயே பலவிதமான சலசலப்புக்கள் ஏற்பட்டிருப்பதனை நீங்கள் அறிவீர்கள். மிகச் சொற்பஅளவிலானஎண்ணிக்கையானவர்கள் அரியநேத்திரன் என்கின்ற ஒரு மாயமானுக்கு மயங்கி அதனை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள். அப்படியான முயற்சியிலே எங்களுடைய கட்சி ஈடுபட்டது கிடையாது. அதிலே எங்களது எந்தப் பங்களிப்பும்கிடையாது என்று மாவையையும் சிறீதரனையும் குத்திக்காட்டினார் சுமந்திரன்.

அவர் அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவித்ததாவது:

உதிரிகள் எல்லாம் சேர்ந்து பெரியதொரு திட்டத்தை வகுத்து தமிழர் ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் திட்டத்தை தொடங்கியபோதே எங்கள் கட்சியின் மத்திய செயற்குழுவினர் 5 தடவைகள்கூடி சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற முடிவை எடுத்திருக்கின்றோம்.

முதல் கூட்டத்திலேயே தமிழ் வேட்பாளர் என்பதன் பின்னாள் உள்ள அபாயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் எனச் சொன்னோம். இறுதியிலே 'இலங்கைத் தமிழரசுக் கட்சியை எப்படியும் நாங்கள் வழிக்குக் கொண்டு வருவோம் எனச் சொல்லிக்கொண்டிருந்தவர்கள் அது முடியாமல்போன காரணத்தினாலே எங்களுடைய கட்சியில் இருந்தே ஒருவரைப் பிரித்தெடுத்து அவரைத் தமது வேட்பாளர் என்னும் நாமம் சூட்டி முன்னிறுத்தியிருக்கின்றார்கள்.

அவருக்கு எதிராக நாங்கள் ஒழுக்காற்று நடவடிக்கைஎடுத்திருக்கின்றோம். அவரிடத்தில் விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. எங்கள் கூட்டங்களுக்கு அவர் வருவதற்கு நாங்கள் தடை விதித்திருக்கின்றோம். அவருடன் இணைந்து பிரசாரத்தில் ஈடுபடும் எங்கள் உறுப்பினர்களுக்கு எச்சரிக்கை விடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றோம். இவை பொதுவெளியிலே சொல்லப்படவேண்டும். எங்கள்கட்சியின்உத்தியோகபூர்வமுடிவைமலினப்படுத்தும்வகையில் பலர்இன்றுசெயற்பட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களை என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி பின்னர் தீர்மானிப்போம்.

ஆனால், நெருங்கி வந்திருக்கின்ற இந்த ஜனாதிபதித் தேர்தலிலே வடக்கு, கிழக்கு வாழ் தமிழர்களின் பிரதான கட்சியானஇலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு மட்டும்தான் என்பதை உறுதியாகக் கட்சியின் சார்பிலே உத்தியோகபூர்வமாகப் பொது மேடையிலே அறிவிப்பதில் நான் பெருமைப்படுகின்றேன்.

தேர்தலைப் பகிஷ்கரிப்பதோ, அரியநேத்திரன் என்கின்ற மாயமானுக்கு வாக்களிப்பதோ உங்களுடைய பொன்னான வாக்கை நீங்களே குழி தோண்டிப் புதைத்து வைக்கின்ற செயலாகவே இருக்கும். ஜனநாயகத்திலே ஒவ்வொரு வாக்களிக்கும் சந்தர்ப்பம் வருகின்றபோதுதான் ஒருகுடிமகனுக்குத்தான் அளிக்கின்ற புள்ளடி நாட்டிலே ஒரு மாற்றத்தை, தான்விரும்புகின்றஆட்சியாளனைக்கொண்டு வருகின்ற உரித்தை வழங்குகின்றது. இதை இல்லாமல் செய்யும் கோஷமே பகிஷ்கரிப்பு மற்றும் அரியநேத்திரன் முழக்கம் என்றார்.

ஆக மொத்தத்தில் மாவையரின் நேற்றைய செயலைத் தொடர்ந்து அவரைக் கணக்கிலெடுக்காமலேயே தமிழ் அரசுக் கட்சி சஜித்தை ஆதரிக்க முடிவு எடுத்ததற்கான காரணத்தைவிளக்கும்அறிக்கைஒன்றுஇன்று வெளிவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. வெட்கங்கெட்டுப்போய் அந்தக் கூட்டத்திற்கும் மாவையர்போவாராஎன்பதைப்பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மத்திய அரசு மீளப் பெறக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவோம்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் கூட்டணி ஏற்பாடு செய்த 58 ஆவது கூட்டம், யாழ்ப்பாணம் மானிப்பாயில் நேற்று வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

வைன் ஸ்டோர்ஸ் அனுமதிப்பத்திரம், மதுபான சாலை அனுமதி பத்திரம், என்பனவற்றைப் பெற்றுக் கொண்டவர்கள் எம்மிடம் இல்லை. விசேட வரங்களையும் வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொண்டவர்கள் எம்மோடு இல்லை. இன, மத, குல, கட்சி பேதங்களின்றிநாட்டைகட்டியெழுப்புவதற்காக இணைந்து கொண்டவர்களே எம்மோடு இருக்கின்றார்கள்.

வடக்கு கிழக்கு பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்குத் தீர்வினைப் பெற்றுக்கொடுப்போம். நல்லிணக்க செயற்பாடுகளின் ஊடாகவே பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர முடியும். தொடர்ந்தும் அலறிக் கொண்டிருக்கின்ற பிரச்சினையை வைத்திருக்க முடியாது. அது நாட்டின் ஐக்கியத்தை பாதிக்கின்றமையால் நல்லிணக்கத்தை மையப்படுத்தி இளைஞர்களைவலுப்படுத்தும் வேலை திட்டத்தை முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒன்றிணைந்த நாட்டிற்குள் அதிகார பகிர்வுக்காக குறுகிய காலத்திற்குள் மாகாண சபை தேர்தலை நடத்துவோம். மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை மத்திய அரசு எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவோம். அரசமைப்பின் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நான் முன்னரே பேசியுள்ளேன். அதை இன்றும் சொல்வேன், நாளையும் சொல்வேன்.

நாட்டில் இனங்கள் மற்றும் மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவேண்டும். 13ஆவது திருத்தம் சட்டப் புத்தகத்தில் இல்லையா? சட்டத்தில் கூறப்பட்டுள்ளதை நடைமுறைப்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

அது நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தீங்கானது அல்ல. அது உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை எங்களுக்கு உள்ளது. மற்றவர்கள் இதைக் கூறப் பயப்படுகிறார்கள் என்பதை நான் அறிவேன். நான் அப்படி இல்லை. நான் சரியானதை அப்படியே சொல்கிறேன்.

அத்தோடு வடகிழக்கு மக்களுக்காக நன்கொடையாளர்கள் மாநாட்டைக் கூட்டுவோம் என்கின்ற கொள்கைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு, வடக்கு கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயல்படுவோம்.

இளைஞர்களின் தொழில் வாய்ப்பு பிரச்சினையை தீர்ப்பதற்காக புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்போம். தொழில் வாய்ப்பில்லாமல் அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கின்ற இளம் சமூகத்தை அந்த அழுத்தத்தில் இருந்து மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் வீடமைப்பு நடவடிக்கைகளையும் மாதிரி கிராமங்களை உருவாக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்தோம். கோட்டாபய ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்த பின்னர் அந்த வீடமைப்பு திட்டங்களையும், மாதிரி கிராம உருவாக்கத்தையும் நிறுத்தினார். பதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் கோட்டாபய ராஜபக்சவின் கொள்கையை பின்பற்றியமையால் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவில்லை. நாம் அதிகாரத்திற்கு வந்த பிறகு வீடமைப்பு திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்போம்.

கியூ.ஆர். முறையில் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் எரிபொருள் நிவாரணங்களை வழங்குவோம். செல்வந்தர்களுக்கும் பணக்காரர்களுக்கும் இந்த எரிபொருள் நிவாரணம் கிடைக்கப் பெற மாட்டாது.

அனைத்துப் பாடசாலைகளையும் சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக மாற்றுவதோடு, அனைத்து வைத்தியசாலைகளையும் சகல வசதிகளும் கொண்ட வைத்தியசாலைகளாகவும் மாற்றுவோம். இலவச கல்வியையும் இலவச சுகாதார சேவையையும் வளமான சேவையாக மாற்றுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கை போன்று ஏனைய மாகாணங்களிலும் பெருந்தொகையான இளைஞர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கு நவீன தொழில்நுட்பத்தையும் உயர் கல்வியையும் வழங்கக்கூடிய வகையில் சர்வதேச தரத்திலான இளைஞர் அபிவிருத்தி மத்திய நிலையங்களை உருவாக்குவோம். அதன் ஊடாக கணினி விஞ்ஞானம், மொழித் தேர்ச்சி, தகவல் தொழில்நுட்ப அறிவு என்பவற்றைப் பெற்றுக் கொடுப்போம். இளைஞர்களை மேம்படுத்துவதன் ஊடாக அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவோம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

வறுமை ஒழிப்பு வேலைதிட்டத்தின் ஊடாக 24 மாதங்களுக்கு வறிய குடும்பங்களுக்கு தலா 20,000 ரூபா வீதம் ஐந்து பிரிவுகளுக்குள் உள்ளடங்கிய வகையில் பெற்றுக்கொடுப்போம். அதனூடாக வறுமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். பெண்களை மையப்படுத்தி இந்த வேலை திட்டத்தை முன்னெடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாத் பதியுதீன், மனோகணேசன், இராதாகிருஷ்ணன், வட மாகாண அவைத் தலைவர் சிவஞானம், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கேசவன் சயந்தன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். சுமந்திரம் என்கிற தலைப்பிலான கட்டுரைகள் அடங்கிய பிரசுரம் ஒன்றும் இந்தக் கூட்டத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

## சஜித், அநுர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ஆண்டுகளுக்கு முன், மக்கள் தேர்தல் நடத்தக் கேட்கவில்லை. தேர்தலொன்றை நடத்த முடியும் என்று மக்கள் நினைத்திருக்கவில்லை. ஆனால் இன்று மக்கள் பணம் சம்பாதிக்கின்றனர். இந்த நீண்ட வார இறுதியில் கண்டி, நுவரெலியா, பண்டாரவளை ஆகிய பகுதிகளுக்கு வந்துள்ள மக்களைப் பார்க்கும்போது, நாடு அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தைக் காணலாம்.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். ஆட்சியை ஏற்க அன்று இவர்கள் முன்வந்திருந்தால் நான் இங்கு வர வேண்டிய அவசியமே இருந்திருக்காது. பிரதான வேட்பாளர்களான நாங்கள் மூவரும் இதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்கள்.

1977இற்கு முன்னரே எனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தேன். ஜே.ஆர் ஜயவர்தன, ரணசிங்க பிரேமதாச, காமினி திஸாநாயக்க, லலித் அதுலத்முதலி, காமினி அத்துகோரள ஆகியோருடன் நானும் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியை வெற்றிபெறச் செய்தோம். அவர்களில் இன்று நான் மட்டும் எஞ்சியிருக்கிறேன். எனவே ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி மகாவலி திட்டத்தை ஆரம்பித்தார். ஸ்ரீ ஜயவர்தனபுரவை கோட்டேவை தலைநகராக மாற்றினார். ஜே.வி.பி பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்ட இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ பெரும் பங்களிப்பை செய்தார்.

அதன்போது சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி எமது தொழில் மூலோபாயங்களை முன்வைத்தோம். இந்தப் பணி இலங்கை வரலாற்றில் ஒரு சாதனை என்றே கூற வேண்டும். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை முன்வைக்கப்பட்ட போது அவரைக் காப்பாற்றியது நான்தான். நான் அவரைக் காப்பாற்றவில்லை என்றால் சஜித் பிரேமதாச இன்று அரசியலில் ஈடுபட்டிருக்க முடியாது.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மரணத்தின் போது, அந்தப் பொறுப்புகளை நான்தான் ஏற்றுக்கொண்டேன். அந்த சமயத்தில் எனது நண்பர்களான லலித், காமினி ஆகியோரை விட்டுவிட்டு கட்சியுடன் இருந்தேன். முன்னாள் ஜனாதிபதியின் ரணசிங்க பிரேமதாசவின் மகனான சஜித் தனது தந்தையின் கொள்கைகளுக்கு துரோகம் இழைத்தமைக்கு வருந்துகிறேன். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியில் அவருக்கு என்ன உரிமை இருக்கிறது என்று தெரியவில்லை.

2020 நாடாளுமன்றத் தேர்தலின் போது இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படப் போகும் சேதத்தை நான் முன்கூட்டியே குறிப்பிட்டேன். ஆனால் அதை யாரும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# எம்.பிக்களின் ஓய்வூதியத்தை ஒழிக்க நினைக்கும் ஜே.வி.பியின் கூட்டங்களுக்காக கோடியில் செலவு

## மாற்றங்களுக்காக மக்களை பலிக்கடாக்களாக்காதீர் என ரிஷாத் சாட்டை






பொருளாதாரத்தை மீதப்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை நிறுத்தப்போவதாகக் கூறும் தேசிய மக்கள் சக்தி, தங்களது அரசியல் மேடைகளுக்காக கோடிக்கணக்கான ரூபாக்களை செலவிடுவதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவைஆதரித்து,களுத்துறை மாவட்டத்தின் பேருவளை, தர்காநகர், அடுழுகமை மற்றும் பாணந்துறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற பிரசாரக்கூட்டங்களில்உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது -

கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கூறினோம். சிலர் எங்களை நம்பாது அவருக்கு வாக்களித்தனர். பிரதேச சபையில் உறுப்பினராகக் கூட இருக்காத அவரால், திறமையாக ஆட்சி செய்ய முடியாமல் போனது. பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் மக்கள் போராட்டம் வெடித்தது. ஆட்சியைப் பாரமெடுக்குமாறு சஜித் பிரேமதாஸவுக்கு அவர் அழைப்பு விடுத்தார். ஆனாலும், கோட்டாபயவின் தலைமையில், பிரதமர் பதவியை பாரமேற்க முடியாதென சஜித் மறுத்துவிட்டார். அவரின் அணியிலிருந்த பங்காளிக் கட்சிகளையும் கலந்தாலோசித்துத்தான்,சஜித் இந்த முடிவை எடுத்தார்.

ரணில்விக்ரமசிங்கயாரையாவது கலந்தாலோசிப்பதற்கு அவரிடம் எம்.பிக்களோ அல்லது பங்காளிக் கட்சிகளோஇருக்கவில்லை. தனியாக இருந்த அவர், தனியாகச் சென்று ஆட்சியைப்பாரமெடுத்தார். இந்தியா வழங்கிய 04 பில்லியன் டொலர் நிதியைக்கொண்டு வரிசையை முடித்து வைத்தார். ஆனாலும், வீசா மோசடி மற்றும் புற்றுநோய் மருந்து மோசடி உள்ளிட்ட மிகப்பெரிய மோசடிகளை ரணிலால் தடுக்க முடியவில்லை.

நாட்டின் சுதந்திரத்துக்குப் பின்னர் நடந்த பாரிய மோசடிதான் வீசா விவகாரம். ஐம்பதாயிரம்கோடிரூபாவை அமைச்சர்கள் சுருட்டிக்கொள்வதற்கு உதவியவர் ரணில். இவரால் நாட்டின் பொருளாதாரத்தை மீட்கவே முடியாது.

மற்றொருபுறமாக தேசிய மக்கள் சக்தி, மக்களின் ஆணைகளைக் கோருகிறது. ஊழலை ஒழிக்கப் போகிறார்களாம். கள்வர்களைக் கைது செய்யப்போகிறார்களாம். எம்.பிக்களின் ஓய்வூதியமான18,000ரூபாவைநிறுத்தப் போகிறார்களாம். நாங்கள் கேட்கிறோம். நிறைவேற்றதிகார ஜனாதிபதியால்தான், கள்வர்களைப் பிடிக்க முடியுமா? பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள் நாட்டில் ஏன் உள்ளன? கெஹலிய ரம்புக்வெல்லவின்ஊழலையார்பிடித்தது? மக்களே பிடித்தனர். வீசா மோசடியை நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், சுமந்திரன் மற்றும் சம்பிக்க ரணவக்க ஆகியோரே நீதிமன்றத்தில் வழக்காடி நிறுத்தினர்.

தேசியமக்கள்சக்தியின்நிறைவேற்றுக் குழுவிலுள்ள 28 பேரில், ஒரு முஸ்லிமோ அல்லது தமிழரோ இல்லை. இதுதான், இவர்களின் மனநிலை. மாற்றம் ஒன்றுக்காகமக்களைப்பலிக்கடாக்களாக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தியில் சகல சமூகங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் உள்ளன. ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரட்ன, ரவூப் ஹக்கீம் மற்றும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் உள்ளிட்ட பலர் எம்முடனே உள்ளனர். நம்பிக்கையோடு சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களியுங்கள். -என்று கூறினார்.(05)

# தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் இதுவரையில் 240 முறைப்பாடுகள்

## 67 பேர் கைது என்கிறார் பொலிஸ் ஊடகப்பேச்சாளர்



நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், கடந்த வியாழக்கிழமை வரையான காலப்பகுதியில் தேர்தல்சட்டமீறல்கள்தொடர்பில்240முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன எனவும், அவற்றுடன் தொடர்புடைய 67 சந்தேக நபர்கள்ஏற்கனவேகைதுசெய்யப்பட்டிருக்கிருீன்றனர் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ் அதிபர்சட்டத்தரணிநிஹால்தல்துவதெரிவித்துள்ளார்.

மீரிகம, பொகலகம பிரதேசத்தில் இரண்டு கட்சி அலுவலகங்களும், திவுலபிட்டிய கித்துல்வல பிரதேசத்தில் உள்ள கட்சி அலுவலகமும் தீயிட்டு எரிக்கப்பட்டிருக்கின்றன என பல்லேவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கித்துல்வலகிந்தம்மாமனசந்தியில்அமைந்துள்ள கட்சி அலுவலகம் ஒன்றின் பெயர் பலகைகள் தீயால் சேதமடைந்திருப்பதுடன், ஒன்றரை கிலோமீற்றர் தொலையில் உள்ள ஹெய்டிவல கிராமத்தில் உள்ள அலுவலகத்தின் பெயர் பலகைகளும் தீயில் எரிந்துசேதமடைந்துள்ளன.

அந்த இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் தொலைவில் உள்ள மற்றுமொருஅலுவலகத்தின் பெயர்ப்பலகைகளும்எரிக்கப் பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவங்கள் தொடர்பில் பல்லேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

அதேவேளை கடந்த வியாழக்கிழமை வரையான காலப்பகுதியில் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 240 முறைப்பாடுகள் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்றிருக்கின்றன எனவும், அவற்றுடன் தொடர்புடைய 67 சந்தேக நபர்கள் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ் அதிபர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

அதேபோன்று மேற்குறிப்பிட்ட 240 முறைப்பாடுகளில்99 முறைப்பாடுகள் குற்றவியல்குற்றங்களுடன் தொடர்புடையவை எனக் குறிப்பிட்டுள்ள அவர், இக்காலப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான 6 வாகனங்கள்பொலிஸாரால்கைப்பற்றப்பட்டிருக்கின்றன எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (05)

# 95 கிலோ கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைது

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனை வத்திரையான் பகுதியில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 95 கிலோ 520 கிராம் கேரளா கஞ்சா சிறப்பு அதிரடி படையினருக்கு ஞாயிற்றுக்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசியதகவலைஅடுத்துஅப்பகுதியை சுற்றி வளைப்பை மேற்கொண்ட சிறப்பு அதிரடிப்படையினர் வீட்டில் மறைத்து கனவைக்கப்பட்டிருந்த கஞ்சா மற்றும் அப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்திலும்ஒரு பொதிகஞ்சாஇருந்தத்துடன்அப்பகுதியில் காணப்பட்ட கப்வாகனத்தையும் சிறப்பு அதிரடிப்படையினர் பறி முதல் செய்துள்ளனர்.

அத்துடன் இச்சம்வத்துடன்தொடர்புடைய பெண் ஒருவரையும் சந்தேகத்தின் பேரில் சிறப்பு அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும்தடையபொருள்கள்அனைத்தும் பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பளை பொலிஸ்நிலைய பொறுப்பு அதிகாரி தெரிவித்துள்ளார்.(05)



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சம்பந்தரின் ஆளுமையும் தமிழர்களின் தலைவிதியும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவருமான சம்பந்தனின் மறைவின் பின்னர் அவரைக் கடுமையாக விமர்சித்துபலரும்எ–முதினர். போருக்குப்பின்னரானகாலத்தில் தமிழர்களுக்கு உறுதியான தலைமைத்துவத்தை வழங்க அவர் தவறிவிட்டார் என்பது அந்த விமர்சனங்களில் முக்கியமான ஒன்று. கொழும்பு ஆட்சியாளர்களுடன் சேர்ந்துகொண்டு தமிழர்களின் அரசியல் போராட்டத்தை மழுங்கடித்துவிட்டார் என்பது மற்றொரு குற்றச்சாட்டு. தமிழர்களின் தரப்பிலிருந்து அடிப்படைக் கோரிக்கைகள், வேணவாக்களில் மாற்றமின்றி அதிகபட்ச விட்டுக்கொடுப்புக்களுடன் ஓர் அரசியல் தீர்வை அடையசம்பந்தர்எடுத்தமுயற்சியின்விளைவாகஎழுந்தவைகள் அந்த விமர்சனங்கள்.

அவர் மறைந்ததன் பின்னர் தமிழ் அரசியலின் செல்நெறிபப் பார்க்கும்போது அவரே இருந்திருக்கலாமோ என்கிற அங்கலாய்ப்பு ஏற்படுகின்றது. சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற முதலாவது அரசுத் தலைவர் தேர்தல் இது. ஆனால் தமிழர்களால் ஒருமித்து ஏகமனதாக ஒரு முடிவுக்கு வரமுடியாத நிலையை தமிழ்த் தேசியத்தின் பேரால் இந்தத் தலைவர்கள் ஏற்படுத்தி வைத்திருக்கின்றார்கள். ஒற்றுமை ஒற்றுமை என்று பெருங்குரலில் கத்திக்கொண்டே தமிழர்களைச் சிதறடித்திருக்கிறார்கள். 2009 முதல் வந்த மூன்று அரசுத் தலைவர் தேர்தல்களிலும் சம்பந்தர் சரியோ பிழையோ தமிழர்களுக்குத் தெளிவான முடிவை, வழிகாட்டலை வழங்கியிருந்தார்.

தமிழர்களின் வரலாற்றில் மிகப் பாராதூரமான, மோசமான பாதிப்பை, இழப்பை, மனித உரிமை மீறல்களை ஏற்படுத்திய தரைப் படைத் தளதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது என்று அவர் எடுத்த முடிவைக்கூட அவரால் தமிழர்களை ஏற்க வைக்க முடிந்தது. தன்னோடு அணி திரண்டிருந்த தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களையும் தமிழ் மக்களையும் ஒருங்கே கட்டியாளும் தலைமைத்துவ ஆளுமையை அவர் கொண்டிருந்த காரணத்தால் அது சாத்தியமாகிற்று.

இன்றோ நிலமை அந்தோ பரிதாபம் என்றாகிவிட்டது. 2024 அரசுத் தேர்தலில் தமிழ் மக்கள் யாரை ஆதரிப்பது என்பதில் தமிழ் மக்களுக்கு தெளிவான வழிகாட்டல் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அல்லது வேண்டும் என்றே குழப்பம் ஏற்படுத்தப்படுகின்றது. இந்த அரசுத் தலைவர் தேர்தலை முன்வைத்து தமிழர்கள் அரசியலைக் கையாளுதல் என்ற முழக்கத்துடன் தொடங்கப்பட்ட முயற்சிகள் சிங்கள வேட்பாளர்களின் வெறும் கைத்தடிகளாக தமிழ் அரசியல் தலைமைகள் பலவரும் இருப்பதை வெளிச்சம்போட்டுக் காட்டியுள்ளன. தமது சுயநல அரசியலுக்காக தெற்கின் சிங்கள அரசியல்வாதிகளுடன் தனிப்படக் கூட்டுச் சேர்வதற்கு இவர்கள் தயங்கமாட்டார்கள் என்பதைப் பகிரங்கப்படுத்தியிருக்கின்றன.

இத்தகைய அரசியல்வாதிகளையே தன் பின்னால் வைத்துக்கொண்டு தமிழ் இனத்தை ஒருநிலைப்படுத்த முடிந்திருக்கின்றது என்றால், வரலாற்று முடிவுகளை எடுக்க முடிந்திருக்கின்றது என்றால் சம்பந்தர் எவ்வளவு அரசியல் ஆளுமையும் தூரநோக்கமும் கொண்டவராக இருந்திருப்பார் என்பதை இந்தத் தருணத்தில் சிந்திக்கவேண்டியுள்ளது. அவர் இன்றி ஒரு தேர்தலைக்கூட பெயருக்கு தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகளால் எதிர்கொள்ளமுடியவில்லை, போட்டுடைத்துவிட்டார்கள் என்பது அவரது இருப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. அவரது ஆளுமையின் பிரமாண்டத்தை எடுத்தியம்புகின்றது. அதனால்தான் அவர் தான் உயிரோடு இருக்கும்போதே ஏதோ ஒரு தீர்வைத்தன்னும் அடைந்துவிடவேண்டும் என்று துடியாத் துடித்துள்ளார்.

அத்தகைய ஆளுமை மிக்க தூரநோக்கம் மிக்க தலைவரையே இலகுவாக ஏமாற்றி, விரைந்து சாவை நோக்கித் தள்ளிவிட முடிந்த சிங்கள அரசியல்வாதிகள் முன், அவர்கள் முன் தமது சுயநலன்களுக்காக மண்டியிடத் துடிக்கும் இப்போதுள்ள அரசியலாளர்கள் எம்மாத்திரம்? இது தமிழர்களின் தலைவிதி என்று நோவதைத் தவிர வேறு என்ன செய்வது?

# இஸ்ரேலுக்கு பலநாடுகள் ஆயுத தடை போர்க்குற்ற விசாரணை சாத்தியமா ?




**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உலக நாடுகள் பலவும் இஸ்ரேலுக்கு ஆயுத தடை விதித்து வரும் வேளையில், போர்க்குற்ற விசாரணை சாத்தியமா எனும் கேள்வியும் எழுந்துள்ளது. ஆயுதங்கள் வழங்க பல நாடுகள் மறுப்பு தெரிவித்தாலும் இஸ்ரேலின் போர்க் குணாம்சம் இன்னமும் மாறவில்லை.

இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்யும் முடிவில் இருந்து விலகியுள்ள நாடுகளின் வரிசையில் தற்போது பிரித்தானியாவும் இணைந்துள்ளது.




காசா போரின் பின்னர் நீண்ட காலம் முன்னெடுத்த ஆய்வின் முடிவில் தற்போது இந்த முடிவை எடுத்துள்ளதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் லாம்மி அறிவித்துள்ளார்.

இதனைப் போலவே, கடந்த ஜனவரி மாதம் அறிவிப்பு ஒன்றை வெளியிட்ட இத்தாலி, புதிதாக இஸ்ரேலுடன் எந்த ஆயுத ஒப்பந்தமும் செய்யப்படாது, ஆனால் ஒக்டோபர் 7 அல்லது அதற்கு முன்னர் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் அமுலில் இருக்கும் எனக் குறிப்பிட்டது.

பல வருடங்களாக இஸ்ரேலுக்கு இராணுவ உபகரணங்களை வழங்கும் மூன்றாவது பெரிய நாடாக இத்தாலி உள்ளது.

ஸ்பெயின் நாடும் இஸ்ரேலுக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதில்லை என ஜனவரி மாதம் அறிவித்தது. ஸ்பெயின் அரசு வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் செல்லும் கப்பல்களும் தங்கள் துறைமுகத்தை பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்க முடியாது எனவும் அறிவித்தது.

இவ்வருட மார்ச் மாதத்தில் இருந்து கனடாவும் இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை நிறுத்தி வைத்துள்ளது.

இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதில் கடுமையான கட்டுப்பாடுகளை பெல்ஜியம் அரசு விதித்துள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகள் இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பனை செய்வதை தடைசெய்யவேண்டும் என்றும் அது கோரிவருகிறது.

பெப்ரவரி மாதத்தில் இருந்தே இஸ்ரேலுக்கு ஆயுதம் விற்பதில்லை என நெதர்லாந்து முடிவெடுத்துள்ளது. ஆனால் உதிரிப் பாகங்களை அமெரிக்காவுக்கு விற்பனை செய்து வருகிறது. அவற்றை அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கி வருகிறது.

கடந்த 18 மே 2024இல் இஸ்ரேலுக்கு ஆயுதங்களுடன் சென்ற சென்னை கப்பலுக்கு ஸ்பெயின் அனுமதி மறுப்பும் தெரிவித்தது.

இந்த நிலையில் அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இஸ்ரேலுக்கு தாராளமாக ஆயுதங்கள் வழங்கி வருகின்றன.

**நமீபியாவில் அனுமதி மறுப்பு :**

ஆபிரிக்க நாடான நமீபியா அண்மையில் அதிரடி நடவடிக்கையாக, இஸ்ரேல் கப்பலுக்கு அனுமதி மறுத்தது.

வெடி மருந்துகளுடன் வந்த இஸ்ரேல் ஆயுத கப்பலை, நங்கூர மிட அனுமதி மறுத்த நமீபியா, பினதங்கிய நாடாக இருந்தாலும் துணிச்சலாக எடுத்த முடிவு என்றே கருதப்படுகிறது.

இன விரோத நடவடிக்கை, பயங்கரவாதம், போர்க்குற்றம் ஆகிய காரணங்களால் உலக அரங்கில் இருந்து தொடர்ந்து தனிமைப்பட்டுவருகிறது இஸ்ரேல்.

இந்நிலையில் ஆப்பிக்க நாடான நமீபியா நோக்கி வெடி மருந்துகள் நிரப்பப்பட்ட இஸ்ரேலின் எம்.வி.கத்ரின் (MV Kathrin) என்ற கப்பல் வந்துள்ளது. வியட்நாமில் இருந்து ஆயுதங்களை ஏற்றிக்கொண்டு வந்த அந்தக் கப்பல், ஓய்வு மற்றும் பராமரிப்புக்காக, நங்கூரமிடுவதற்கு அனுமதி கேட்டுள்ளது.

இந்த நிலையில், தங்களது கடல்பரப்பில் இஸ்ரேல் ஆயுத கப்பலுக்கு அனுமதி இல்லை என நமீபியா அரசு அதிரடியாக அறிவித்து, திருப்பி அனுப்பியது.

காசாவில் நடைபெறும் போர்க்குற்றங்களைக் கருத்தில்கொண்டு இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக நமீபியா நீதித்துறை பெண் அமைச்சர் இவோன் தௌசாப் (Yvonne Dausab) குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாக கொண்ட நமீபியா ஒரு பின்தங்கிய நாடாகும். இருப்பினும்




துணிச்சலுடன் அமெரிக்காவின் கூட்டாளியான இஸ்ரேலுக்கு கறுப்புக் கொடி காட்டியுள்ளது. காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்களை நிறவெறியின் ஒரு பகுதியாக ஆபிரிக்க நாடுகள் கருதி வருகின்றன.

இதன் காரணமாகவே தென் ஆபிரிக்கா, தானாக முன்வந்து, சர்வதேச நீதிமன்றத்தில்

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# இஸ்ரேலுக்கு பலநாடுகள் ஆயுத தடை

4ம் பக்க தொடர்ச்சி...........



இஸ்ரேலுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது.

**கொலம்பியா நிலக்கரி ஏற்றுமதி தடை:**

இஸ்ரேலுக்கு நிலக்கரி ஏற்றுமதி செய்வதை தென் அமெரிக்க நாடான கொலம்பியா நிறுத்தியுள்ளது. பல தென் அமெரிக்க நாடுகள் இஸ்ரேலுடனான தூதரக உறவுகளைத் துண்டித்துள்ளன. ஆனால் சவுதி, ஐக்கிய அரபு இராச்சியம் , எகிப்து, ஜோர்டான் உள்ளிட்ட அரபு சுனிப்பிரிவு முஸ்லீம் ஆட்சியாளர்கள் தொடர்ந்து இஸ்ரேல் உடன் உறவுகளை பராமரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**இங்கிலாந்து கடும் போக்கு:**

இஸ்ரேலுக்கு ஆயுத விற்பனையை இங்கிலாந்து நிறுத்தியதை எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன. கடந்த வருட ஒக்டோபருக்குப் பிறகு இஸ்ரேல் எவ்வாறு நடந்துகொண்டது என்பதன் அடிப்படையில் இத்தடை வந்துள்ளது.

தற்போதய தடை ஒரு முழுமையான ஆயுதத் தடையல்ல. 1982 இல் மார்கரெட் தாட்சர் பதவியில் இருந்த காலம் முதல், பல சந்தர்ப்பங்களில் இதேபோன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பிரிட்டன் இஸ்ரேலுடன் பல ஏற்றுமதி உரிமங்களைக் கொண்டுள்ளது. இது நாட்டின் மொத்த இறக்குமதியில் ஒரு சிறிய அளவையே குறிக்கிறது.

தற்போது இஸ்ரேலின் பிரதம மந்திரி உள்நாட்டு எதிர்ப்புகள் மற்றும் வேலைநிறுத்தங்களால் அதிகரித்த அழுத்தத்தை எதிர்கொள்வதைப் போலவே, இந்த தடை முடிவு பெஞ்சமின் நெதன்யாகுவின்நிர்வாகத்தைப்பெருமளவில்கோபப்படுத்தும்.




**கனடாவும் ஆயுத தடை :**

இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை கனடா நிறுத்துவதாகக் கூறியுள்ளது. கனடா முழுவதிலும் உள்ள பல ஆயுதக் நிறுவனங்கள் காசாவில் நடந்த படுகொலைகள்

மற்றும் ஆயிரக்கணக்கான பாலஸ்தீனியர்களைக் கொன்று குவித்த ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தொழில்நுட்பத்தை இஸ்ரேலுக்கு விற்பதன் மூலம் பெரும் இலாபத்தை ஈட்டியிருக்கின்றன.

தொடர்ந்தும் இஸ்ரேலிய இராணுவம் காசாவில் பொதுமக்கள் சுற்றுப்புறங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் மீது கண்மூடித்தனமாக குண்டுவீசி வருகிறது.

42000 பேரைக் கொன்றதுடன், அவர்களில் பாதிப்பேர் குழந்தைகள் ஆவார்கள்.




பள்ளிகள், மருத்துவமனைகள், தகவல் தொடர்பு அமைப்புகள், நீர் ஆதாரங்கள், விவசாயம் என்பன மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மருத்துவர்கள் மற்றும்ஊடகவியலாளர்கள்இலக்கு வைக்கப்பட்ட தாக்குதல்களில் அழிக்கப்பட்டுள்ளனர்.

உணவு மற்றும் எரிபொருள் தடுக்கப்பட்டதுடன், கற்பனை செய்ய முடியாத பேரழிவை பாலஸ்தீனம் கண்டுள்ளது. அத்துடன் பாதுகாப்பான பிரதேசங்களில் குண்டுகள்

வீசப்பட்டதால், கிட்டத்தட்ட 2 மில்லியன் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தக் கொடும் போரை நிறுத்த கனேடிய அரசு இறுதியாக போர்நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்த போதிலும், காசா மீதான இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதல்களை கனடா தொடர்ந்து ஆதரிக்கிறது என்பதே உண்மையாகும்.

உடனடியாக இஸ்ரேல் மீது ஆயுதத் தடையை விதிக்க கனடாவை பல பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்டுள்ளன. இதன்பொருள்கனடாஉடனடியாகஇஸ்ரேலுக்குஆயுதங்களை

வழங்குவதை நிறுத்துதல், இஸ்ரேலுக்கு ஆயுதங்கள், உதிரிபாகங்கள் அல்லது ராணுவ சேவைகளை விற்பதற்கு ஏற்கனவே உள்ள ஒப்பந்தங்களை ரத்து செய்தல்,

ஏற்கனவே உள்ள ஏற்றுமதி உரிமங்களை ரத்து செய்தல், புதியஒப்பந்தங்கள்அல்லதுஏற்றுமதிஉரிமங்களைவழங்காமல் இருத்தல் மற்றும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட உரிமங்களை மாற்றுவதை உடனடியாக நிறுத்துதல் என்பனவாகும்.

இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் செல்வதைத் துண்டித்து, ஆயுதத் தடையை அமுல்படுத்துவதன் மூலம் போர்நிறுத்தத்திற்கான அழைப்பை கனடா உண்மையானதாக மாற்ற வேண்டிய நேரம் இதுவென இந்த பொது அமைப்புக்கள் கேட்டுக்கொண்டுள்ளன.

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



# நபிகள் நாயகம் போதித்த அரசமைப்பை முஸ்லிம்கள் தேர்தலில் பயன்படுத்துவோம்

## மீலாத் வாழ்த்து செய்தியில் கலீலுர்ரஹ்மான்

(நூருல் ஹுதா உமர்)

இலங்கையில்தேர்தல்ஒன்றுநடைபெற்றுவாக்களிக்க மக்கள்தயாராகஇருக்கும்போது, இலங்கைமுஸ்லிம்கள் மட்டுமல்ல உலக முஸ்லிம்களும் இஸ்லாமிய மத போதகரான கண்மணி நபிகள் நாயகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தில் நபிகளார் கற்றுத் தந்த அரசியல் ஆட்சி முறையை சிந்தித்து நமது வாக்கு செலுத்தலை தீர்மானிக்க இந்த பெருநாளில் முடிவெடுப்போம் என ஜனாதிபதி செயலணியின் முன்னாள் உறுப்பினரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் –

பொருளாதார நெருக்கடியின் போது இறைவனின் உதவியால் நாம் மீண்டோம். அதற்காக பலரும் பல்வேறு முயற்சிகளை செய்தனர். அதற்காக நாம் முயற்சிகளை செய்தவர்களுக்கு, இறைவனுக்கும் நன்றி செலுத்துவோம், மோசடி, ஊழல், ஏமாற்று ஆகியவற்றைத் தவிர்த்து, பொருளாதாரத்தை நிலைநிறுத்தவும், பராமரிக்கவும், இஸ்லாமிய போதனைகளையும், நபிகளாரின் அறிவுரைகளைப் பின்பற்றவும் நாம் திடசங்கடம் பூண்டு வரவிருக்கும் தேர்தலில் நமது செயற்பாடுகளை செய்தால், அந்த உன்னத நபியின் ஆசீர்வாதத்தை சந்தேகத்திற்கு இடமின்றி பெறுவோம்.

எனவே, முஸ்லிம் சமூகத்தில் உள்ள மத, அரசியல், சிவில்தலைவர்கள்ஒன்றிணைந்துமுஸ்லிம்சமூகத்தை நபிகள் நாயகத்தின் பாதையில் நடக்க செய்ய வழிகாட்ட வேண்டும். அவ்வாறில்லாமல் முஸ்லிம் சமூகம் தனது குறுகிய அரசியல் அதிகாரத்தையும் இலக்குகளையும் அடைவதற்கு ஒரு சாக்காக பயன்படுத்தக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.(05)

# வானில் கடத்திச் செல்லப்பட்ட பீடி இலை பொதிகளுடன் புத்தளத்தில் ஒருவர் கைது





புத்தளம் பிரதேசத்தில் வானில் கடத்திச் செல்லப்பட்ட பீடி இலை பொதிகளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினர் மற்றும் நுரைச்சோலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 371 கிலோ கிராம் நிறையுடைய 11 பீடி இலை பொதிகள் மற்றும் வான் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)




# றோயல்ஸ் அணி சம்பியன்



(எம்.ஏ.றமீஸ்)

தேசிய மீலாத் நபிதினவிழாவினை முன்னிட்டு அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அறபுக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பாடு செய்யப் பட்ட மாபெரும் மென் பந்துகிறிக்கற்சுற்றுப் போட்டி சனிக்கிழமை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது இவ்வாண்டுக்கான சம்பியனாக சர்க்கியன் றோயல்ஸ் அணி தெரிவாகியதுடன், இரண்டாமிடத்தை ஷர்க்கியன் றொபின்ஸ் அணியும் தெரிவாகியது.

கல்லூரி முதல்வர் மௌலவி ஏ.எல்.எம்.அஷ்ரஃப் ஷர்க்கி தலைமையில் இடம்பெற்ற இக்கிறிக்கற் சுற்றுப் போட்டியின் போது கல்லூரி மாணவர்களின் ஷர்க்கியன் றோயல்ஸ், சர்க்கியன் றொபின்ஸ், சர்க்கியன் பிளாஸ்டர்ஸ், சர்க்கியன் வாரியஸ் ஆகிய நான்கு அணிகள் பங்கு பற்றியிருந்தன.

அணிக்கு 11 வீரர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட 05 ஓவர்கள் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு சர்க்கியன் றொபின்ஸ் அணியும், சர்க்கியன் றோயல்ஸ் அணியும் தெரிவாகின.

இதன்போது நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட ஷர்க்கியன் றொபின்ஸ் அணியினர் முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்களில் மூன்று விக்கற்றுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

வெற்றி இலக்கான 71 ஓட்டங்களை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஷர்க்கியன் றோயல்ஸ் அணியினர் 4.5 ஓவர்களில் வெற்றி இலக்கைக் கடந்து சம்பியனாக தெரிவு செய்யப்பட்டனர். இச்சுற்றுப் போட்டியின்போது ஷர்க்கியன் றொபின்ஸ் அணியினர் இரண்டாமிடத்தினைப் பெற்றுக் கொண்டனர்.(05)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# திருமண நிகழ்விற்குசென்ற வான் விபத்து : தந்தை இறப்பு, தாய் மற்றும் மகன் காயம்

களுத்துறை–ஹொரணை வீதியில் படவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற வேன் விபத்தில் தந்தை உயிரிழந்துள்ளதுடன் தாய் மற்றும் மகன் காயமடைந்துள்ளனர் என களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பொக்குனுவிட்ட, வெலிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய தந்தையே உயிரிழந்துள்ளார்.

திருமண நிகழ்வொன்றுக்குச் செல்வதற்காக களுத்துறையிலிருந்து ஹொரணை நோக்கிப் பயணித்த வான் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த ஆற்றில் கவிழ்ந்து வீழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, வானில் பயணித்த தந்தை, தாய் மற்றும் மகன் காயமடைந்துள்ள நிலையில் கல்பாத வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் தந்தை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், தாயும் மகனும் மேலதிக சிகிச்சைக்காக ஹொரணை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் புத்தளம் பகுதியில் கைது

புத்தளம் பகுதியில் இருநூற்று மூன்று கிலோகிராம் கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட கேரளா கஞ்சாவின் மதிப்பு ஐந்து கோடிக்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

# ஊழலை ஒழித்து வறுமையை போக்கும் ஆட்சியை உருவாக்கும் விம்பமாக சஜித் பார்க்கப்படுகிறார்

## ஹரீஸ் எம்.பி. இடித்துரைப்பு



(நூருல் ஹுதா உமர்)

இந்த நாட்டில் ஊழலை ஒழிக்கும், வறுமை ஒழிக்கும் ஓர் ஆட்சியை உருவாக்குவதற்காக ஊழலை ஒழிப்பதற்கான விம்பமாக சஜித் பிரேமதாஸ பார்க்கப்படுகின்றார் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான, நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்ட மாபெரும் பொதுக்கூட்டம் சாய்ந்தமருது பௌஸி மைதானத்தில் அவரின் தலைமையில் சனிக்கிழமை இடம்பெற்றது. இங்கு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

சஜித் பிரேமதாஸவின் தந்தை ரணசிங்க பிரேமதாஸ இருக்கின்ற போது இந்த நாட்டில் வறுமையை ஒழித்து ஜனசவிய திட்டத்தையும் அறிமுகப்படுத்தி வைத்தார். ஜனசவிய திட்டத்தினூடாக கஷ்டப்படுகின்ற குடும்பத்தில் இருந்து ஆசிரியரை உருவாக்குவதற்காக ஜனசவிய ஆசிரியர் சேவையை உருவாக்கினார். இந்த நாட்டில் முப்பது ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆசிரியர் தொழில் இந்தத் திட்டத்தின் மூலம் கொடுத்ததை யாராலும் மறக்க முடியாது.

அந்தகாலத்தில் அரசு வீடுகள் என்பது எட்டாக்கனியாக இருந்தது. சஜித்துடைய தந்தை ரணசிங்க பிரேமதாஸ வந்ததுக்கு பிறகு தான் ஒரு லட்சம் வீட்டு திட்டம் வந்தது. கடந்த 15 வருட காலமாக நாங்கள் எல்லோரும் இலவு காத்த கிளிகள் போல இருந்தோம். எப்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தாரோ அதற்கு பிறகு அவர்களின் ஆட்சியில் எங்களுக்கு வீடு கட்டி தந்திருக்கின்றார்களா? இல்லை எங்களுடைய பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பை தந்தார்களா? எங்களின் மீனவர்களுக்கான படகுத்துறையை கட்டினார்களா? எங்களின் நகரத்தை அபிவிருத்தி செய்து தந்தார்களா? ஆனால் அவரும் அவருடைய மகனும் இந்த நாட்டினுடைய பணத்தை எங்கே கொண்டு பதுக்கி வைத்துள்ளவர்கள்?

இலங்கை நாட்டில் வீடு கட்ட வேண்டிய பணத்தை கொள்ளையடித்து சுவிஸர்லாந்திலும், டுபாயிலும் பதுக்கி வைத்துவிட்டு இன்று நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். இன்று சஜித் பிரேமதாஸவுடன் போட்டி போடுகின்ற எமது நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த சாய்ந்தமருது மண்ணுக்கும் கடந்த வாரம் வந்து போனார். பலரும் பேசுவார்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரண்டு வருடமாக ஆட்சியில் இருக்கின்றார்.

அவர் எமது நாட்டில் வரிசை யுகத்தை இல்லாமல் ஆக்கினார் என்று பலரும் சொல்லலாம். ஆனால் என்ன பிரச்சினை என்றால் மஹிந்த ராஜபக்ஷவுடன் களவெடுத்தவர்கள் எல்லோரும் இவருடன் தான் இப்போது இருக்கின்றார்கள். உண்மையில் எமது வேட்பாளர் சஜித் பிரேமதாஷவுக்கான கல்முனை தொகுதிக்கான கூட்டம் சாய்ந்தமருது மண்ணில் மிக விமர்சையாக இடம் பெறுகின்றது. வரலாற்று சிறப்புமிக்க கூட்டமாக நாங்கள் இந்தக் கூட்டத்தைப் பார்க்கின்றோம் - என்றார். (05)

# பொல்லால் தாக்கி மனைவி கொலை

## கணவன் கைது

தனது மனைவியை பொல்லால் தாக்கி கொலை செய்ததாக கூறப்படும் கணவன் கைது செய்யப்பட்டுள்ளார் என வாதுவை பொலிஸார் தெரிவித்தனர்.

வாதுவை, பொத்துப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த மனைவியே கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலின் போது கொலை செய்யப்பட்ட மனைவியின் சகோதரியும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

## சஜித், அநுர....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கவில்லை. நாம் சொன்னது போல் இந்த நாட்டின் பொருளாதாரம் சரிந்தது. 2022இல் பொருளாதாரம் சரிந்த போது நான் நாட்டைப் பொறுப்பேற்றேன். அனைத்து கட்சிகளின் ஆதரவையும் கேட்டேன். சஜித் எனக்கு ஆதரவு வழங்கவில்லை. மாறாக ஜீ.எல்.பீரிஸுடன் இணைந்து டளஸ் அழகப்பெருமவுக்கு ஆதரவளித்து சஜித் பிரதமராகத் தயாரானார். சஜித் என்னிடம் பிரதமர் பதவியை கேட்டிருந்தால் நான் அதனைப் பெற்றுக் கொடுத்திருப்பேன்.

இன்று முன்னாள் விவசாய அமைச்சர் அநுரவும் சஜித் பிரேமதாசவும் என்னுடன் போட்டியிடுகிறார்கள். அன்று நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்து மக்களை வாழ வைக்கும் பொறுப்பு ஆளும்தரப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. ஏன் இந்தப் பொறுப்பை அவர்கள் ஏற்கவில்லை? இன்று அனைத்தையும் இலவசமாகத் தருவதாக உறுதியளிக்கின்றனர். அன்று ஏன் இவற்றைச் செய்யவில்லை என்று அவர்களிடம் கேட்கிறேன்.

அரசியல்வாதிகள் ஏன் சாதாரண மக்களை கைவிட்டார்கள் என அனுரகுமார கேட்கிறார். தொழிலாளர் வர்க்கத்தைப் பற்றி இவ்வளவு கவலை இருந்தால், பொருளாதார நெருக்கடியில் ஏன் அவர் நாட்டை ஏற்கவில்லை? நான் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய பிறகு, இப்போது நாட்டின் பொறுப்பை கேட்கின்றனர்.

நான் ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் இருந்து விலகத் தயாராவதாக ஐக்கிய மக்கள் சக்தி கூறி வருகிறது. நான் ராஜினாமா செய்பவன் அல்லன் என்பதை அவர்களுக்கு கூறிவைக்கிறேன். அவர்களைப் போல் ஓடும் காலணி அணிந்தவன் அல்லன் நான். ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள அனைவரையும் என்னுடன் இணையுமாறு கேட்டுக்கொள்கின்றேன். சஜித் பிரேமதாசாவுக்கும் அழைப்பு விடுக்கிறேன். தப்பி ஓடாமல் இருப்பது தொடர்பான பாடத்தை அவருக்குக் கற்றுக் கொடுக்க விரும்புகிறேன்.

இக்கட்டான காலங்களில் இந்த நாட்டு மக்களை வாழ வைப்பதற்காக கடினமான முடிவுகளை எடுத்தேன். வைத்தியர் ஒருவர் விருப்பமின்றி அறுவை சிகிச்சை செய்வது போல அந்த முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. பொருளாதாரத்தின் வளர்ச்சியுடன், நாங்கள் மக்களுக்கு அதிக நிவாரணங்களை வழங்குகிறோம். 2025ஆம் ஆண்டு இறுதிக்குள் மக்களின் வாழ்க்கைச் சுமையை குறைப்பதே எனது பிரதான நோக்கமாகும்.

இப்போது சஜித்தும், அநுரவும் பொருட்களின் விலையைக் குறைப்பதாக சொல்கின்றனர். சலுகைகள் வழங்கப்படும் என கூறுகின்றனர். திசைகாட்டியின் விஞ்ஞாபனத்தில் அனைத்தும் குறைக்கப்பட்டுள்ளன. இவர்கள் வாக்குறுதி வழங்கியுள்ளவற்றைக் கொடுத்தால் ஆளும்தரப்பின் செலவு உயரும்.

அனைத்து வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களையும் சர்வதேச நாணய நிதியம் ஆராய்ந்துள்ளது. செப்டம்பர் 13 ஆம் திகதி நாணய நிதியம் அறிவிப்பொன்றை வெளியிட்டது. "இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான நெருக்கடியிலிருந்து வெளியேற ஒரு வாய்ப்பை வழங்குவதற்கு இந்த வேலைத் திட்டத்தின் நோக்கங்களை அடைவது மிகவும் முக்கியமானது" என்று அது கூறியுள்ளது. இந்த இலக்குகளை மாற்ற வேண்டாம் என்று கூறியுள்ளது.

தற்போதைய சீர்திருத்தங்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பது அவசியமானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை மாற்ற முடியாது என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி, உடன்பாடு எட்டப்பட்ட ஒப்பந்தங்களை தொடர வேண்டும் என நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இவற்றை நான் கூறவில்லை. சர்வதேச நாணய நிதியம்தான் கூறுகிறது.

ஜனாதிபதி ஆசனத்தில் அமர தனக்கு வாய்ப்பொன்றை வழங்குமாறு அநுர கேட்கிறார். மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி நாற்காலிக்கு கொண்டு வர ஜே.வி.பி. தான் பரிந்துரைத்தது. அவர்கள் முகத்தை மாற்ற முயல்கிறார்கள்.

நான் எதனையும் மாற்ற மாட்டேன். நாடாளுமன்ற அதிகாரத்தைக் கொண்டு நாட்டைஸ்திரப்படுத்தினேன். புரட்சியொன்றை மேற்கொள்வதற்கே மக்களிடம் ஆணையைக் கேட்கிறேன். மாற்றத்தைப் பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அதற்கு ஒரு நடைமுறைச் சாத்தியமான திட்டம் தேவை. 5 வருடங்களுக்குள் இந்த நாட்டின் பொருளாதாரத்தில் புரட்சியை ஏற்படுத்தி புதிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் என மக்களுக்கு உறுதியளிக்கிறேன்.

மேலும், அஸ்வெசும, உறுமய ஆகிய திட்டங்களை செயல்படுத்தி சமூக புரட்சியை செய்து வருகிறேன். இந்தப் புரட்சியை யாரும் செய்யவில்லை. இந்தப் புரட்சியில் கலந்துகொள்ள அனைவரையும் அழைக்கிறேன். ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன உள்ளிட்ட நாம் அனைவரும் இணைந்து இந்தப் புரட்சியை செய்வோம் என்றார்.

## தியாகி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாமி ஆலயப் பின் வீதியில் அமைந்துள்ள, படையினரால் உடைத்தழிக்கப்பட்ட திலீபனின் நினைவிடத்தில் முதன்மை நிகழ்வு இடம்பெற்றது. தியாகி தீலிபன் தனது பட்டினிப் போராட்டத்தைத் தொடக்கிய நேரமான முற்பகல் 9.45 மணியளவில் அஞ்சலி நிகழ்வு ஆரம்பமானது.

மாவீரர் ஒருவரின் தாயாரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதன் பின்னர் அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு முன்னாள் போராளி ஒருவர் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். நிகழ்வில் கலந்துகொண்ட பலரும் உணர்வுபூர்வமாக மலர் அஞ்சலி செலுத்தினார்.

மீளக்குடியமர்தல் என்ற பெயரில் இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் புதிதாகத் திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைக் கூடங்களிலும் இராணுவப் பொலிஸ் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப்பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப்பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும் ஆகிய ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து தியாகி திலீபன் போராட்டத்தை முன்னெடுத்தார்.

15.09.1987 தொடக்கம் 26.09.1987 வரையான 12 நாட்கள் நீராகாரம்கூட அருந்தாமல் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தின் இறுதியில் அவர் வீரச்சாவைத்தழுவிக் கொண்டார். அவரது கோரிக்கைகளை இந்திய, இலங்கை அரசுகள் புறந்தள்ளியதன் விளைவாக அவர் தனது போராட்டத்தைச் சாகும் வரைக்கும் கைவிடவில்லை.

பிரான்ஸிலும் நினைவுதினம்

இதேவேளை, பிரான்ஸ் நாட்டின் தலைநகர் பாரிஸிலும் தியாகி திலீபனின் நினைவுதினம் எழுச்சியுடன் நேற்றும் தொடங்கியது.

பாரிஸ் 10ஆம் வட்டாரத்தில் தமிழர் வர்த்தக மையத்தில் 'குட்டி யாழ்ப்பாணம்' எனஅழைக்கப்படு லா சப்பல் (La Chapelle) பகுதில் நேற்றுக் காலை 9:45 மணிக்கு தொடங்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் வணக்க நிகழ்வுகள் 26ம் திகதி மாலை 18:00மணி வரை நடைபெறும்.

தாயகத்தில் நல்லூரில் அமைக்கப்பட்டு படையினரால் அழிக்கப்பட்ட நினைவுத்தூபியின் மாதிரி வடிவம் செய்யப்பட்டு இம்முறை இந் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில் திலீபன் அவர்களின் 12 நாட்கள் பட்டினிப் போராட்டம் குறித்த விளக்கமளிக்கும் பதாகையும் பிரஞ்சு மொழியில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கிறது.

## அவசர ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தின்போது பாதுகாப்பு பிரதானிகள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியமையே இதற்கான காரணம் என்று ஆளும்தரப்பில் தெரிவிக்கப்பட்டுகின்றது. அப்போது முப்படைகளின் தளபதி என்ற வகையில் ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

இதன்படி, எந்தவொரு அவசர நிலையிலும் பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தை நிலை நிறுத்துவது குறித்தும், அவசர நிலையில் இராணுவம் தனது அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் சட்டமா அதிபரிடம் ஆலோசனை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகத்துடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. முப்படை தளபதிகள் மற்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் தலைமையில் பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் அவசரகால பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, படைத் தளபதிகளின் தலைமையில் செப்டெம்பர் 18 விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இதன் பின்னர் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக ஜனாதிபதியின் தலைமையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அவசர பாதுகாப்புச் சபைக் கூட்டமும் நடத்தப்படவுள்ளது – என்று ஜனாதிபதி செயலகத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தெரிவாகும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் இதனைப் பகிர்ந்துள்ளார். சர்வதேச ஜனநாயக தினமான நேற்று, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வெளியிட்டுள்ள பதிவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச ஜனநாயக தினத்தில், பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், நீதி போன்ற வலுவான மற்றும் நிலையான ஜனநாயகத்தின் கொள்கைகளை நாங்கள் கொண்டாடுகிறோம். தேர்தல்கள் மூலம் தங்கள் எதிர்காலத்தை வடிவமைப்பதில் ஒவ்வொரு தனிநபருக்கும் ஒரு கருத்து இருப்பதை உறுதிசெய்கிறோம்.

இலங்கை மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா எதிர்பார்த்துள்ளது. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவது இலங்கையின் ஜனநாயகத்திற்காக ஆற்றப்பட வேண்டிய முக்கிய கடமை - என்றுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21 இடம்பெறவுள்ள நிலையில், அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் தளத்தில் இந்தக் கருத்துக்களைப்

## நாட்டைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாறையில் நேற்று இடம்பெற்ற பொது ஜன பெரமுனவின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை முடிவுக்குக்கொண்டுவந்து நாட்டின் தேசிய பாதுகாப்பையும், ஒருமைப்பாட்டையும் நான் உறுதிப்படுத்தினேன். அபிவிருத்தியைத் துரிதமான மேற்கொண்டு தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தினேன்.

2005ஆம் ஆண்டு ஆளும்தரப்பைப் பொறுப்பேற்கும் போது பொருளாதார நிலைமை 15 பில்லியன் டொலர்களாக காணப்பட்டது. 2015 இல் 85 பில்லியன் டொலர்கையிருப்புடன் அரசை ஒப்படைத்தேன்.

ஊழலை முடிவுக்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுக் கொண்டு 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த நல்லாட்சி தேசிய பொருளாதாரத்தையும், தேசிய பாதுகாப்பையும் பலவீனப்படுத்தியது.

2014ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்மை ஊழல்வாதிகளாக சித்தரித்து அதிகாரத்தை கோரியவர்கள் இம்முறையும் அதிகாரத்தை கோருகிறார்கள்.

வெறுப்பினை முன்னிலைப்படுத்தி செயற்படும் இவர்களால் பொருளாதாரத்தை ஒருபோதும் மேம்படுத்த முடியாது. சூழ்ச்சிகளினால்தான் நாங்கள் 2015 ஆம் ஆண்டு தோற்கடிக்கப்பட்டோம். அந்தச் சூழ்ச்சி இன்றும் தொடர்கிறது.

தேசியத்தைப் பாதுகாப்பதற்கு அனைவரும் எம்முடன் கைகோர்க்கவேண்டும். பொதுஜன பெரமுன தலைமையிலான ஆளும்தரப்பு நிச்சயம் தோற்றம் பெறும் என்பதை உறுதியாகக் குறிப்பிடுகிறேன் என்றார்.

## புலமைப்பரிசில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்முறை புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3 லட்சத்து 23 ஆயிரத்து 879 பரீட்சார்த்திகள் தோற்றினர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்

## இலங்கையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்க இராஜாங்கத் திணைகளம் விடுத்துள்ள பயண ஆலோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேர்தலுக்கு முன்னோ அல்லது அதற்குப் பின்போ ஆர்ப்பாட்டங்கள் நடக்கலாம். சில சமயங்களில், போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் நீர் பீரங்கி மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளைப் பயன்படுத்துகின்றனர். அமெரிக்க குடிமக்கள் அனைத்து வகையான கூட்டங்களையும் தவிர்க்க நினைவூட்டப்படுகிறார்கள், அமைதியான கூட்டங்கள், சிறிய கூட்டங்கள்கூட வன்முறையாக மாறும் நிலைமைகள் உள்ளதால் அவதானமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சுற்றுலாத் தலங்கள், போக்குவரத்து மையங்கள், சந்தைகள், வணிக வளாகங்கள், அரச வசதிகள், ஹோட்டல்கள், களியாட்ட விடுதிகள், உணவகங்கள், வழிபாட்டுத் தலங்கள், பூங்காக்கள், முக்கிய விளையாட்டு மற்றும் கலாசார நிகழ்வுகள், கல்வி நிறுவனங்கள், விமான நிலையங்கள், மருத்துவமனைகள் மற்றும் பிற பொது இடங்கள் போன்றவற்றை குறிவைத்து சிறிய அல்லது எந்த எச்சரிக்கையும் இன்றி இலங்கையில் பயங்கரவாத தாக்குதல்கள் நடந்துள்ளன.

அதனடிப்படையில் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்,

சுற்றுலா இடங்கள் மற்றும் நெரிசலான பொது இடங்களுக்குச் செல்லும்போது உங்கள் சுற்றுப்புறத்தைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

உள்ளூர் அதிகாரிகளின் வழிமுறைகளைப் பின்பற்றவும்.

நிகழ்வுகளை முறியடிக்க உள்ளூர் ஊடகங்களைக் கண்காணித்து, புதிய தகவலின் அடிப்படையில் உங்கள் திட்டங்களைச் சரிசெய்யவும்.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கூட்டங்களை தவிர்க்கவும்.

விழிப்பூட்டல்களைப் பெறுவதற்கும், அவசரகாலத்தில் உங்களைக் கண்டறிவதை எளிதாக்குவதற்கும் ஸ்மார்ட் டிராவலர் பதிவுத் திட்டத்தில் பதிவு செய்யவும்.

முகநூல் மற்றும் டுவிட்டரில் வெளியுறவுத் துறையைப் பின்தொடரவும்.

இலங்கைக்கான குற்றம் மற்றும் பாதுகாப்பு அறிக்கையை மதிப்பாய்வு செய்யவும்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் அமெரிக்க குடிமக்கள் அவசரகால சூழ்நிலைகளுக்கு எப்போதும் ஒரு தற்செயல் திட்டத்தை வைத்திருக்க வேண்டும். பயணிகளின் சரிபார்ப்புப் பட்டியலை மதிப்பாய்வு செய்யவும்.

உங்கள் பயணம் தொடர்பான சமீபத்திய பயண சுகாதாரத் தகவலுக்கு சிடிசி (CDC) பக்கத்தைப் பார்வையிடவும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## வாக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலக்க தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கு அமைவாக அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

குற்றவாளிகளுக்கு அபராதத் தொகைக்கு மேலதிகமாக ஒரு வருடத்திற்கும் மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படுமென தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வாக்கு மோசடியில் ஈடுபடுவோருக்கு 1981 ஆம் ஆண்டின் 15 இலக்க சட்டத்தின் 76 ஆவது சரத்திற்கு அமைவாக இதற்கு முன்னர் 500 ரூபா அபராதத் தொகை அறிவிக்கப்பட்டிருந்தது.

## கொடையாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

57ஆவது பரப்புரைக் கூட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

சகல வசதிகளையும் கொண்ட பாடசாலைகளாக அனைத்து பாடசாலைகளையும் மாற்றி தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம், நவீன தொழில்நுட்பம், மற்றும் ஆங்கில மொழிக்கல்வி என்பனவற்றை பயில்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி, புதிய கல்வி முறை ஒன்றின் ஊடாகச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவோம். சகல வசதிகளையும் கொண்ட வைத்தியசாலைகளாக அனைத்து வைத்தியசாலைகளையும் மாற்றி உயர் தரத்திலான அனைத்து வசதிகளையும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

## கொடையாளர் ....

(எட்டாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட வைத்தியசாலைக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவோம்.

அத்தோடு ஓய்வூதிய முரண்பாடுகளைத் தீர்த்து சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்பு கணக்குகளுக்குவழங்கப்பட்ட15வீதவட்டியை மீண்டும் பெற்றுக் கொடுப்போம். வீடமைப்பு திட்டத்தை மீண்டும் தொடங்குவோம். கோட்டாபய ராஜபக்சவும் ரணில் விக்கிரமசிங்கவும் வீடமைப்பு திட்டத்தை நிறுத்தினாலும் தாம் அதிகாரத்திற்கு வந்த உடனே உதா கம்மான திட்டத்தை நிறைவு செய்து அதனை மக்களிடம் கையளிப்போம்.

விவசாயிகளுக்கு 5000 ரூபாவுக்கு 50 கிலோ கிராம் உரமூடை ஒன்றை வழங்குவோம். மீனவர்களுக்கான எரிபொருள் நிவாரணத்தை வழங்குவோம். விவசாயிகளுக்கும் மீனவர்களுக்கும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்கும் தொடர்ந்து இந்த நிவாரணங்களை வழங்குவோம். செல்வந்தர்களுக்கு இந்த நிவாரணங்கள் தேவைப்படுவதில்லை. மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கும் முச்சக்கர வண்டி சாரதிகளுக்குமேஇந்தநிவாரணம்பெறுமதியாக அமைகின்றது.

இளைஞர் சமூகத்துக்காக இளைஞர் தொழில்நுட்ப மத்திய நிலையங்களை உருவாக்கி, அதன் ஊடாக தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் ஆங்கில மொழி கல்வி, தொழில் உருவாக்கம் போன்றவற்றை சர்வதேச தரத்தில் கற்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்போம். தொழில் வாய்ப்பில்லாத இளம் தலைமுறையினருக்கு தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

வறுமையை ஒழிக்கின்ற நோக்கில் 24 மாதங்களுக்கான வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம். முதலீடு, உற்பத்தி, நுகர்வு, சேமிப்பு மற்றும் ஏற்றுமதி ஆகிய ஐந்து திட்டங்களின் கீழ் மாதமொன்றுக்கு 20,000 ரூபா வீதம் வழங்கி வறுமையை ஒழிப்போம் என்றார்.

## மலையகத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அநுரகுமார திசாநாயக்கவை ஆதரித்து நுவரெலியா - தலவாக்கலையில் நேற்றுக் கூட்டம் நடைபெற்றது. தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட தலைவர் மஞ்சுள சுரவீர, தேசிய குழு உறுப்பினர் கே.செல்வி உட்பட பலரும் பங்கேற்றனர். அங்கு உரையாற்றிய அநுர மேலும் தெரிவித்ததாவது:

மலையகத்திலிருந்துபலர்நாடாளுமன்றம் சென்றுள்ளனர். அமைச்சு பதவிகளையும் வகித்துள்ளனர். ஆனால் நுவரெலியா மாவட்டத்தில் மக்கள்படும் துன்பம் மாறவில்லை. எனவே, இதே வலிகளுடன் அவர்களுடன் பயணிப்பதா இல்லையேல் மாற்றம் வேண்டுமா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும். புதிய அரசியலே வேண்டும் என மக்கள் சொல்கின்றனர். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியில் செப்டம்பர் 21 நுவரெலியா மாவட்ட மக்களும் பங்கேற்கவுள்ளனர்.

மக்களுக்கு போலி உறுதிமொழிகளை வழங்கி வாக்குவேட்டை நடத்தும் அரசியலே முன்னெடுக்கப்பட்டுவந்தது. தேர்தல் காலத்தில் உணவு, மதுபானம் உள்ளிட்டவை வழங்கப்பட்டு வாக்குகள் பெறப்பட்டன. தோட்டப்பகுதிகளில் மக்களை அச்சுறுத்தில் வாக்குகளைப் பெற்றனர். இவ்வாறான நிலைமைகளுக்கு முடிவுகட்ட வேண்டும் அல்லவா? செப்டம்பர் 21 அதனைச் செய்வோம்.

வடக்கு, கிழக்கு மற்றும் தெற்கு மக்கள் தேசிய மக்கள் சக்தி பின்னால் அணிதிரண்டுள்ளனர். மலையக மக்களும் எம்மைவெற்றிபெறவைப்பதற்குஒன்றிணைய வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தில் ஹங்குராங் கெத்த, வலப்பனையில் வெற்றி உறுதி. ஏனைய இருதொகுதிகளையும் வெற்றிபெறுவதற்குரிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியுள்ளது. ரணில் விக்கிரமசிங்க உட்பட ஏனைய வேட்பாளர்கள் எப்படிதான் உறுதிமொழிகள் வழங்கினாலும் எமது வெற்றியை திசை திருப்ப முடியாது. ஏமாற்று அரசியலுக்குளம்மால்தான்முற்றுபுள்ளிவைக்க முடியும் என்பது மக்களுக்கு தெரியும்.

மலையகத் தலைவர்களுக்கு சுகபோக வாழ்க்கை, மக்களுக்கு துன்பகரமான வாழ்க்கை. இந்நிலைமை மாறக்கூடாதா? மக்கள் பிரச்சினையை தீர்க்கக்கூடிய மக்களுக்கான அரசியலை நாம் ஏற்படுத்த வேண்டும்.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகிவிட்டன. எனவே, அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என தற்போது பேசிப் பயன் இல்லை. இந்நாட்டுபொருளாதாரத்துக்கு அவர்களே பங்களிப்பு வழங்குகின்றனர். அவர்கள் இலங்கை பிரஜைகள். இந்தியத் தமிழர்கள் அல்லர், அவர்களை இலங்கை தமிழர்கள் என்பதே சரி.

பெருந்தோட்ட மக்களுக்கு ஒரு அங்குலமேனும் காணி உரிமை இல்லை, வீட்டு உரிமை இல்லை. இப்பிரச்சினையை தீர்க்ககூடாதா? எமது ஆட்சியில் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். காணி உரிமைவழங்கப்படும்.பெருந்தோட்டபகுதியில் கல்விமூலம் மாற்றத்தை ஏற்படுத்தலாம். எனவே, பெருந்தோட்டப்பகுதியில் கல்வி கட்டமைப்பு மேம்படுத்தப்படும். மலையக சமூகத்தில் கல்வியால் மேம்பட்டவர்கள் உள்ளனர். பிள்ளைகளுக்குகல்விவழங்குவது பெற்றோருக்குஇன்றுசுமையாகமாறியுள்ளது. அந்த சுமையை நாம் குறைப்போம். கல்வியைபொறுப்பேற்போம். மந்தபோசனை பிரச்சினைக்கு தீர்வு காணப்படும். சிறந்த சுகாதாரதுறை பெருந்தோட்ட பகுதிகளில் கட்டியெழுப்படும்.

உங்கள் மொழியில் பொலிஸில் முறையிடக்கூடிய உரிமை இருக்க வேண்டும். அரச திணைக்களங்களில் தமிழ் மொழியில் சேவைகளை பெறக்கூடிய நிலை இருக்க வேண்டும். எமது ஆட்சியில் அந்த நிலைமை நிச்சயம் இருக்கும். இந்நிலைமை ஏற்படும்வரை, மொழிபெயர்ப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் -என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# 12 வயது சிறுமி மீது துஸ்பிரயோகம் : தந்தையும் 2 சகோதரர்களும் கைது

12 வயது சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை மற்றும் இரண்டு சகோதரர்கள் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

47 வயதுடைய தந்தையும் 18 மற்றும் 15 வயதுடைய இரு சகோதரர்களுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

இந்த சிறுமி கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதன்முதலில் தனது தந்தையால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் மற்றுமொரு நாள் பெற்றோர்கள் வீட்டில் இல்லாத போது தனது இரு சகோதரர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேக நபர்கள் குறித்த சம்பவத்தை எவரிடமும் கூறக் கூடாது என சிறுமியை அச்சுறுத்தியுள்ளதால் சிறுமி இது தொடர்பில் தனது தாயிடம் தெரிவிக்காமலிருந்துள்ளார்.

பின்னர், இந்த சிறுமியின் வீட்டிற்குச் சென்ற உறவினர் ஒருவர் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயன்றுள்ளதால் சிறுமி இது தொடர்பில் தனது தாயிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, சிறுமியின் மூத்த சகோதரனுக்கு வெலிப்பிட்டிய பிரதேசத்தில் வேலை வாய்ப்பு ஒன்று கிடைத்துள்ளதால் பிரதேச செயலகத்தின் அதிகாரி ஒருவர் சிறுமியின் வீட்டைச் சோதனையிடுவதற்குச் சென்றுள்ளார்.

இதன்போது, இந்த சிறுமி தனக்கு நடந்த பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் அந்த அதிகாரியிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அந்த அதிகாரி இது தொடர்பில் வெலிகம பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேக நபரான தந்தை மற்றும் இரு சகோதரர்களைக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸ் நிலையத்தின் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.(05)



# 10 வாள்களுடன் இருவர் களுத்துறையில் கைது

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கித்துலாவ பிரதேசத்தில் 10 வாள்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

களுத்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வுபிரிவினருக்குக்கிடைத்த தகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கித்துலாவபிரதேசத்தைச்சேர்ந்த 26 மற்றும் 30 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த வாள்கள் அனைத்தும் குற்றச்செயல்களுக்குப் பயன்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நாட்டில் வாகன இறக்குமதியை நிறுத்திவிட்டு பட்டினியில் வாடும் மக்களுக்கு உணவளிக்குக

## இராதாகிருஸ்ணன் எம்.பி. கோரிக்கை



மலையக மக்களுக்கு வாகன இறக்குமதி தேவையில்லை. வாகன இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு பசி பட்டினியில் இருக்கும் மக்களுக்கு முதலில் உணவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி, மலையக இளைஞர் முன்னணி இணைந்து ஏற்பாடு செய்த இளைஞர் மாநாடு ஹற்றன் டி.கே.டபிள்யு மண்டபத்தில் நடைபெற்றது.

இராதாகிருஸ்ணன் ராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் டாக்டர் அப்துல் கலாம் குடும்பத்தின் பேரனும் சர்வதேச அப்துல் கலாம் அறக்கட்டளையின் ஸ்தாபக இணைத் தலைவருமான டாக்டர் ஏ.பி.ஜே.எம்.ஜே சேக் சலீம் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.

விசேட அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் மற்றும் இந்தியாவின் தமிழ் நாட்டில் இருந்து வெளிவருகின்ற இதயக்கனி சஞ்சிகையின் வெளியீட்டாளரும் பிரதம ஆசிரியருமான இதயக்கனி எஸ்.விஜயன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அத்தோடு, மலையக மக்கள் முன்னணியின் செயலாளர் நாயகம் பேராசிரியர் சங்கரன் விஜயசந்திரன், மலையக தொழிலாளர் முன்னணியின் செயலாளர் புஸ்பா விஸ்வநாதன், பொருலாளர் தாழமுத்து சுதாகரன் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் பெருந்திரளான இளைஞர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது உரையாற்றிய இராதாகிருஷ்ணன் எம்.பி. -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறினார், வாகன இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்படும் என்று.

முதலில் மலையக மக்களுக்கு வாகன இறக்குமதி தேவையில்லை. வாகன இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு பசி பட்டினியில் இருக்கும் மக்களுக்கு முதலில் உணவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வாகன இறக்குமதியை செய்து அவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்ளும் சூழ்ச்சியையே செய்கின்றார், ரணில் விக்கிரமசிங்க. எனவே மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். - என்றார். (05)

# தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிய இருவரும் பிணையில் விடுவிப்பு

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து மட்டக்களப்பு நகர்ப் பகுதியில் இரவு வேளையில் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த இருவர் கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் சனிக்கிழமை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நிலையில், நீதிவான் பிணையில் விடுவித்துள்ளார்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் ஷவெள்ளிக்கிழமை நள்ளிரவு வீதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது மாமாங்கம் பகுதியில் வீதியிலுள்ள மின்சாரதூண்கள் மற்றும் சுவர்களில் இருவர் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து தேர்தல் சட்டத்தை மீறி சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்துள்ளனர்.

அதனையடுத்து, இருவரையும் பொலிஸார் கைது செய்ததுடன் சுவரொட்டிகளையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கலாஓயா பகுதியில் கைது

இராஜாங்கனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலாஓயா பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா தொகையுடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் வெள்ளிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலாஓயா பகுதியில் வசிக்கும் 45 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 204 கிலோ 250 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக இராஜாங்கனை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இராஜாங்கனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கொலை மற்றும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் கிரிபத்கொடையில் கைது

கொலை மற்றும் திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பேலியகொடை பொலிஸ் குற்றப்புலனாய்வு தெரிவித்துள்ளது.

பேலியகொடை பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கிரிபத்கொடை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கடவத்தைபிரதேசத்தில்இடம்பெற்றகொலைசம்பவம் ஒன்று தொடர்பிலும் ராகம பிரதேசத்தில் இடம்பெற்ற திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பிலும் சந்தேக நபருக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றத்திலும் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்திலும் இரு வழக்குகள் உள்ளன என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை

# போதைப்பொருள் விற்பனை பல்கலை மாணவன் கைது

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பல்கலை மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளதாக கிரிபத்கொடை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினர் தெரிவித்தனர்.

கிரிபத்கொடை பொலிஸ் குற்றப்புலனாய்வுபிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் களனி பல்கலைக்கழகத்திற்கு அருகில் வைத்துகைதுசெய்யப்பட்டுள்ளார்.

களனி பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 26 வயதுடைய மாணவனே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 30 போதை மாத்திரைகள் மற்றும் இலத்திரனியல் தராசு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிரிபத்கொடை பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.

(05)

# இலஞ்ச, ஊழல் தொடர்பில் 2,142 முறைப்பாடுகள் பதிவு

இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 2,142 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி , இலஞ்ச குற்றச்சாட்டு தொடர்பில் 158 முறைப்பாடுகளும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் 379 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. அத்துடன், சட்டவிரோதமாக சொத்துக்களை சேர்த்தமை தொடர்பில் 79 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வருடத்தின் முதல் 6 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் 26 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 8 பேர் பொலிஸ் அதிகாரிகள் ஆவர்.

மேலும், இலஞ்சம் வாங்கியமை தொடர்பில் 25 பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir





# இப்பாகமுவ நகரத்தில் விபத்து ஒருவர் சாவு; மற்றொருவர் காயம்

இப்பாகமுவ-மடகல்லவீதியில்இப்பாகமுவநகரத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, மோட்டார் சைக்கிள்களின் இரு செலுத்துனர்களும் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.(05)

# நுழைவாயிலை உடைத்துக்கொண்டு காரியாலயத்துக்குள் நுழைந்த 'கெப்'



நுழைவாயிலை உடைத்துக் கொண்டு மாவனெல்லை பொதுச் சுகாதார பரிசோதகர் காரியாலயத்திற்குள் நுழைந்த கெப் வாகனம் ஒன்று அருகில் இருந்த வைத்திய ஆய்வுக்கூடத்தில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

மாவனெல்லை பொதுச் சுகாதார பரிசோதகர் காரியாலயத்திற்குச் சொந்தமான கெப் வாகனம் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின்போது, கெப் வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தில், வைத்திய ஆய்வுகூடத்தின் மதில் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த காரியாலயத்திற்கு முன்னதாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த செயலிழந்த கெப் வாகனம் ஒன்றை இயக்க முற்படும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாவனெல்லை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கொழும்பில் ஹிந்தி தினம்




கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின்கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் வெள்ளிக்கிழமை கொழும்பில் ஹிந்தி தினத்தைக் கொண்டாடியதோடு ஹிந்தி மொழி கற்கை நெறிகளை பூர்த்தி செய்த 30 பொலிஸ் அதிகாரிகளுக்கு சான்றிதழ் அளித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா கலாசார மையத்தில் ஹிந்தி பேசுவதற்கான பாடத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பொலிஸ் அதிகாரிகளை வாழ்த்தியுள்ளார்.

இந்நிகழ்வில் 'இலங்கை ஹிந்தி சமாச்சாரம்' மையத்தின் வருடாந்த இந்தி வெளியீட்டையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களான லலித் பத்திநாயக்க மற்றும் மெதவத்த, தேசிய பொலிஸ் அகாடமியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜாலிய சேனாரத்ன மற்றும் ஏனைய உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டுள்ளனர்.

இதன்போது, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரான லலித் பத்திநாயக்கவால், இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையத்திற்கும் இலங்கை பொலிஸ் அதிகாரிகளுக்கு ஹிந்தி மொழி கற்கை நெறிகளுக்கான பயிற்சி முறைகளை வழங்கியதற்கு நன்றி தெரிவித்துள்ளார்.

ஹிந்தி தினமானது , ஹிந்தி மொழியை இந்தியாவின் அதிகாரபூர்வ மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 75 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கிறதாக குறிப்பிடப்பட்டுள்ளது.(05)

# ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு மதுபானசாலைளுக்குப் பூட்டு

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைளையும் இரண்டு நாள்களுக்கு மூடப்படும் என மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 21ஆம் மற்றும் 22 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானசாலைளையும் மூடப்படும் என மதுவரி திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது .(05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.09.2024இல் வெளியிடப்பெற்றது